## சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

**AS.NO.5/2019** **தேதி.**01.04.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. கலைவாணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... மே.சா./வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 01.04.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.கிருஷ்ணன் |
| த/பெ. | திரு.தட்சணாமூர்த்தி |
| வயது | 45/2026 |

துவக்க நேரம் 12.40 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

எதிர் மேல்முறையீட்டாளர் தரப்பில் குறுக்கு விசாரணை ;–

1. அசல் வழக்கு எண்.436/2013 என்ற வழக்கு யாரால், யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் நாராயணன் மற்றும் அவரது குடும்பத்தினர் எங்களுக்கு எதிராகவும், கடந்த 1995 அன்று பவர் வாங்சிய D.சங்கர் மற்றும் அவர், யார்யாருக்கெல்லாம் வீட்டுமனைகளை விற்பனை செய்தாரோ அந்த நபர்களுக்கு எதிராக அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

2. அந்த அசல் வழக்கு எண்.436/2013ல் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யபப்ட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் சங்கருக்கு

கொடுத்த பவர் செல்லாது என்று பரிகாரம் கேட்டிருந்தார். கடந்த 1995ல் சங்கர் எந்தெந்த வீட்டுமனை எண்களை விற்பனை செய்தார் என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியாமா என்றால் மனைஎண்.02, 03, 07, 08, 09 ஆகிய வீட்டுமனைகளை விற்பனை செய்தார்.

3. அந்த அசல் வழக்கு எண்.436/2013 என்ற வழக்கு எந்த தேதி, மாத வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தேதி, மாதம், தெரியவில்லை 2013ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. இந்த அசல் வழக்கு எண்.436/2013 கடந்த 2013 டிசம்பர் மாதத்தில் தாக்கல் செய்யபப்ட்டது என்றால் தேதி தெரியவில்லை.

4. கடந்த 18.01.2013 அன்று நாங்கள் எங்கள் குடும்பத்திற்குள் சொத்தை பாகப்பிரிவினை செய்து வாலாஜா சார்பதிவாளர், அலுவலகத்தில் பாகப்பிரிவினையை பதிவு செய்துள்ளோம் என்றாலும் அந்த ஆவண எண்.560, 561 ஆகிய ஆவண எண்கள் என்றாலும் சரிதான். நாங்கள் எங்களுக்குள் கூட்டுசேர்ந்து அசல் வழக்கு எண்.436/2013 தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் இந்த இடம் விற்பனை செய்தது எங்களுக்கு தெரியாது, நாங்கள் பாகப்பிவினை செய்துகொண்டபிறகு, வாங்கியவர்கள் வந்து கேட்டபொழுதுதான் எங்களுக்கு விற்பனை செய்தவிவரம் தெரியவந்தது. எனது பாட்டி அமர்தம்மாள், ஒரு செட்டில்மெண்ட் மூலம் மகன்கள் அனுபவிக்கவேண்டும் என்றும், பேரக்குழந்தைகளுக்கு சொத்து சேரவேண்டும் என்று எழுதிவைத்திருந்தார், அதனால் பவர் கொடுத்தது செல்லாது என்று அந்த வழக்கை எனது பெரியப்பா தாக்கல் செய்தார்.

5. எனது பாட்டி, கடந்த 2000 ல் மேற்படி எனது பாட்டி அமிர்தம்மாள் அவர் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் ஆமாம். கடந்த 2000 மாவது ஆண்டு எனது பாட்டி செட்டில்மெண்ட்டு எழுதிவைத்ததை பின்னிட்டு ரத்துசெய்துவிட்டார் என்றாலும் அதன்பின்னிட்டு, ரத்து செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின்பேரில் நாங்கள் கடந்த 2013 ம் ஆண்டு பாகம் பிரித்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

ஆவணங்கள் பரிசிலீக்கவேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கவேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :– ஒத்திவகைப்படுகிறது.

முடிவு நேரம் 1.00 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.